பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

30 10 2024 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இரண்டு நாள் பயணமாக இன்று குஜராத் செல்லும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 280 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

2. தமிழகத்தில் தகுதி வாய்ந்த கரும்பு விவசாயிகள் அனைவருக்கும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

3. உதகமண்டலம் ஏரியை தூர்வாரும் பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு சுற்றுலாப்பயணிகளின் முழுமையான பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று மாநில அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

4. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. நியூசிலாந்துக்கு எதிரான 3வது மற்றும் இறுதி ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

*<<<<>>>>*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இரண்டு நாள் பயணமாக இன்று குஜராத் மாநிலத்திற்கு செல்கிறார்.

கெவாடியா மாவட்டம் ஏக்தாநகரில் 280 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவடைந்த பணிகளை தொடங்கி வைப்பதுடன் புதிய திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

சுற்றுலா மேம்பாடு மற்றும் கெவாடியா பகுதிக்கு எளிதில் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்பு பணிகளுக்கு பிரதமர் அடிக்கல் நாட்ட உள்ளார்.

பயிற்சி முடித்த சிவில் சர்வீசஸ் அதிகாரிகள் மத்தியிலும் பிரதமர் உரையாற்ற உள்ளார்.

*<<<<>>>>*

தமிழகத்தில் தகுதி வாய்ந்த கரும்பு விவசாயிகள் அனைவருக்கும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தீபாவளி பண்டிகைக்கு முன்னதாக கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகையாக டன்னுக்கு 215 ரூபாய் வழங்கவில்லை என்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

முந்தைய அஇஅதிமுக ஆட்சியில் 10 ஆண்டுகளில் கரும்பு விலையை டன்னுக்கு 500 ரூபாய் மட்டுமே உயர்த்தியதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கரும்பு விவசாயிகளுக்கான சிறப்பு ஊக்கத்தொகை வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில், திரு. எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு அடிப்படை ஆதாரமில்லாதது என்றும் அமைச்சர் ராஜேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் உதகமண்டலம் ஏரியை தூர்வாரும் பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு சுற்றுலாப்பயணிகள் முழுமையாக பயன்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

7 கோடியே 51 லட்சம் ரூபாய் செலவில் உதகை ஏரியை தூர்வாரும் பணியை நேற்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

24 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட இந்த ஏரியில் மண், குப்பை, செடி கொடிகள் ஆக்கிரமிப்பை தடுக்கும் வகையில் ஒரு கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பில் தானியங்கி இயந்திரம் அமைக்கும் பணியும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் திரு. சாமிநாதன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

ஜார்கண்ட் சட்டப்பேரவைக்கு இரண்டாம் கட்டமாகவும், மகாராஷ்டிர சட்டப்பேரவைக்கு ஒரேகட்டமாகவும் நவம்பர் 20ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது.

ஜார்கண்ட் மாநிலத்தில் முதற்கட்டமாக நவம்பர் 13ஆம் தேதி 43 தொகுதிகளிலும், இரண்டாவது மற்றும் இறுதிக்கட்டமாக 38 தொகுதிகளில் நவம்பர் 20ஆம் தேதியும் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

மகாராஷ்டிராவில் 288 தொகுதிகளுக்கும் ஒரேகட்டமாக நவம்பர் 20ஆம் தேதி தேர்தல் நடைபெறுகிறது.

இந்தத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், மனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெற உள்ளது.

வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள நவம்பர் ஒன்றாம் தேதி கடைசி நாளாகும்.

<<<<>>>>

தீபாவளிப் பண்டிகை நாளை கொண்டாடப்படும் நிலையில், பட்டாசுகளை வெடிக்கும்போது பொதுமக்கள் மிகுந்த கவனத்துடன் வெடிக்க வேண்டும் என்று சென்னை கே.கே. நகர் இ.எஸ்.ஐ. மருத்துவமனை மருத்துவர் ஏஞ்சலின் செல்வராஜ் அறிவுறுத்தியுள்ளார்.

தீக்காயம் ஏற்படும் பட்சத்தில், உடனடியாக மருத்துவமனையை அணுக வேண்டும் என்று எமது செய்தியாளரிடம் பேசுகையில் தெரிவித்தார்.

<<<<>>>>

தாம்பரம் ஜி.எஸ்.டி. சாலையில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த கனரக வாகனங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக மாநகர போக்குவரத்துத் துணை ஆணையர் திரு. சமய்சிங் மீனா தெரிவித்துள்ளார்.

தீபாவளியை முன்னிட்டு ஏராளமானோர் தென் மாவட்டங்களுக்கு ஒரே நேரத்தில் பயணம் மேற்கொள்வதால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்களைத் தவிர்க்க பாதுகாப்பு பணிகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டிருப்பதாக எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாளை முதல் அடுத்த 4 நாட்களுக்கு தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

நவம்பர் ஒன்றாம் தேதி மதுரை, திண்டுக்கல், ராமநாதபுரம் உள்ளிட்ட தென் மாவட்டங்களிலும், கோவை, நீலகிரி மற்றும் மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதியை ஒட்டியுள்ள மாவட்டங்களிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளை பொறுத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்.

ஒருசில இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

பிலிப்பைன்சில் ஏற்பட்ட சூறாவளி பாதிப்பிற்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 125ஆக அதிகரித்துள்ளது.

------------

இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையே எல்லைப் பகுதியில் பதற்றத்தை தணிப்பதற்கான நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனித்து வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் மாநில சட்டசபையின் முதலாவது கூட்டத்தொடர் துணைநிலை ஆளுநர் உரையுடன் அடுத்த மாதம் 4ஆம் தேதி தொடங்குகிறது.

<<<<>>>>

தீபாவளியை முன்னிட்டு பட்டாசுகளால் ஏற்படும் தீ விபத்து ஏற்பட்டால், அதனை எதிர்கொள்ள தில்லியில் அனைத்து மருத்துவமனைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருநாவலூர் அருகே நகர் கிராமத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க கிளையை மாநில அமைச்சர் திரு. எ.வ. வேலு திறந்து வைத்து மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு கடன் உதவித் தொகையை வழங்கினார்.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டத்தில் மாசற்ற, விபத்தில்லா தீபாவளியை கொண்டாடும் வகையில், விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை அம்மாவட்ட ஆட்சியர் சந்திரகலா தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

தருமபுரி மாவட்டத்தில் விபத்தில்லா தீபாவளி கொண்டாட தீயணைப்புத்துறையினர் சார்பில் நேற்று இருசக்கர வாகன பேரணி நடைபெற்றது.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை சார்பில் கல்லூரி மாணவர்களுக்கு சைபர் குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

<<<<>>>>

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கத் திருத்தப் பணியின் ஒரு பகுதியாக காஞ்சிரபுரத்தில் மகளிர் சுய உதவிக் குழுவினர் பங்கேற்ற விழிப்புணர்வு ரங்கோலி போட்டியை அம்மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் பார்வையிட்டார்.

<<<<>>>>

தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் மத்திய மக்கள் தொடர்பகம் சார்பில் திருப்பூரில் பள்ளி மாணவர்களிடையே ‘லஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்’ என்னும் தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

நியூசிலாந்துக்கு எதிரான 3வது மற்றும் இறுதி ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் 3 போட்டிகளைக் கொண்ட தொடரில் இரண்டில் வெற்றி பெற்று தொடரையும் கைப்பற்றியது.

அகமதாபாதில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த நியூசிலாந்து அணி, 49 புள்ளி 5 ஓவரில் 232 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

233 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் ஆடிய இந்திய மகளிர் அணி, 44 புள்ளி 2 ஓவரில் 236 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

இந்திய அணியின் ஸ்மிருதி மந்தனா சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 8வது சதத்தை பதிவு செய்து சாதனை படைத்தார்.

------------

மகளிர் ஒருநாள் போட்டிகளுக்கான ஐ.சி.சி. பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் இந்தியாவின் ஆல்ரவுண்டர் தீப்தி ஷர்மா இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளில் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் அவர் தரவரிசையில் முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்தின் **Sophie Ecclestone** முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

-------------

ப்ரோ கபடிப் போட்டியில் நேற்று நடைபெற்ற புனே – பெங்கால் அணிகளுக்கு இடையேயான ஆட்டம், டையில் முடிந்தது. இரு அணிகளும் தலா 32 புள்ளிகள் எடுத்தன.

மற்றொரு ஆட்டத்தில் பெங்களூரு அணி – தில்லி அணியை வென்றது. இன்று நடைபெறும் ஆட்டத்தில் குஜராத் அணி – தமிழ்நாடு அணியை எதிர்கொள்கிறது. மற்றொரு போட்டியில் உத்தரப்பிரதேசம் - ஹரியானா அணிகள் மோதுகின்றன.

**<<<<The End>>>>**